# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>
## <u>கூட்டப்பொருள்</u>

2021ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 10.06. 2021 | **1)** தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பையை பிரித்து மறு சுழற்சி செய்யும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது Legacy Waste எனப்படும் மரபு கழிவுகளை அகற்றும் பொருட்டும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உள்ள விதி முறைகளை எந்த தொய்வின்றி பின்பற்றும் பொருட்டும் திடக்கழிவு மேலாண்மை பணியினை முழுமையாக செயல்படுத்தவும், அதனை கண்காணிக்கவும் உரிய புள்ளி விபரங்கள் தயாரிக்க வேண்டியுள்ளது. மேற்படி 60 வார்டுகளிலும் புள்ளி விபரங்கள் தயாரிக்க நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக 61 பணியாளர்கள் மூன்று மாதத்திற்கு நியமனம் செய்வதற்கும், அதற்குரிய செலவீனம் ரூ. 27,68,130/– பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்,எச்3/0768/2020 | **38)**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | **2)** தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித் திரியும் தெரு நாய்களால் பொது மக்களுக்கு அச்சுறுத்தலாகவும் போக்குவரத்திற்கு இடையூறாகவும் இருப்பதாகவும் இருப்பதாக தொடர்ந்து புகார்கள் வரப்பெற்றதன் பேரில் பாரத பிராணிகள் நல வாரியத்தின் வழிகாட்டுதலின்படி தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்திட பாரத விலங்குகள் நல வாரியம் அங்கீகாரம் பெற்ற தனியார் தொண்டு நிறுவனங்களின் மூலம் தெரு நாய்களுக்கு கருத்தடை ( ABC Programme ) செய்து வெறிநாய்கடி தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதமாகவும் கூடுதல் கவனத்துடன் கண்காணிக்க கண்காணிப்பு குழு அமைக்க ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின் பேரில் கீழ்க்கண்டவாறு கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்படுகிறது. | **39)**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

## கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் விபரம்

| வ.எண் | விபரம் | பொறுப்பு |
|---|---|---|
| 1) | ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி | தலைவர் |
| 2) | மாநகர் நல அலுவலர், தூத்துக்குடி மாநகராட்சி | ஒருங்கிணைப் பாளர் |
| 3) | இணை இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை, தூத்தக்குடி | உறுப்பினர் |
| 4) | துணை காவல் கண்காணிப்பாளர், தூத்துக்குடி (நகர்புறம்) | உறுப்பினர் |
| 5) | சுகாதார அலுவலர், தூத்துக்குடி மாநகராட்சி | உறுப்பினர் |
| 6) | ஜீவ காருண்ய விலங்குகள் பாதுகாப்பு அறக்கட்டளை 13/32/4 சிங்கார தோப்பு 2வது தெரு, பார்வதிபுரம் நாகர்கோவில். | உறுப்பினர் |
| 7) | திரு.S.D. சாம் பாரத விலங்குகள் நலவாரிய அங்கீகாரம் பெற்றவர் கதவு எண் 1 சங்கராபுரம் நியு காலனி தூத்துக்குடி கைபேசி 96293–34497 | உறுப்பினர் |
| 8) | திரு. பாரத விலங்குகள் நலவாரிய அங்கீகாரம் பெற்றவர் 68 எட்டையாபுரம் ரோடு தூத்துக்குடி கைபேசி 95007–01498 | உறுப்பினர் |
| | மேற்படி கண்காணிப்பு குழுவானது மாதம் ஒருமுறை கூட்டப்பட்டு நடைபெறும் கூட்டத்தில் தெரு நாய் கருத்தடை மற்றும் வெறிநாய் தடுப்பூசி போடுதல் போன்ற பணிகள் தொடர்பாக பொதுமக்களிடம் பெறப்பெற்ற புகார்கள் பற்றி விவாதிக்கப்படும். மேலும் தெரு நாய்களுக்கு கருத்தடை மேற்கொள்ளும் பணியானது மேற்படி குழுவால் கண்காணிக்கப்படுவதும் அவசியமானதாகும்.<br>எனவே மேற்படி தெருநாய்களை கட்டுப்படுத்துதல் பணியினை கண்காணிக்கும் கண்காணிப்பு குழு ஏற்படுத்தவும் அக்குழு மேற்கொள்ளவேண்டிய பணியினை முறையாக மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>எச்2/11648/2010 | |
| | 3)தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட Added Area20 வார்டுகளில் உள்ள தெருக்களில் உள்ள தெருவிளக்குகளை இறக்கி பராமரிக்கும் பணியினை நகர்புற வாழ்வாதார மையம் மூலம் தற்காலிகமாக பணியாளர்கள் 12 நபர்களின் பணிக்காலம் 14.03.2021 முடிவுற்றது. மேலும் பழைய மாநகராட்சி 40 வார்டு பகுதிகளில் உள்ள LED conversion செய்யப்பட்டுள்ள 90 சதவிகிதம் விளக்குகளை பழுது பராமரிப்பு பணிகளை தற்காலிக பணியாளர்கள் 6 நபர்கள் பணியமைத்தியுள்ளனர். அவர்களின் பணிக்காலம் 02.03.2021 வரை அதன் பணிக்காலம் நிறைவு பெற்றுள்ளது. மாநகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்கு LED conversion பணி நடைபெற்று வருகிறது. இதில் LED விளக்குகள் பொருத்தும் பணியானது 98 சதவிகிதம் இதர மின் ஆற்றல் சேமிப்பு உபகரணங்கள் பொருத்தும் பணியானது 70 சதவிகிதம் முடிக்கப்பட்டு | 40) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் சட்டமன்ற தேர்தல் நன்நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதால், 18 நபர்களுக்கான பணிக்காலத்தினை மேலும், நான்கு மாதகாலத்திற்கு பணிக்காலத்தினை நீட்டித்து வழங்கவும் அதற்குரிய உத்தேச செலவினம் ரூ, 10.65 லட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1296/2020/இ3 | |
| | 4)இம்மாநகராட்சி நகராட்சியாக இருந்து 05.08.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட போது அருகில் உள்ள தூத்துக்குடி ரூரல், சங்கரப்பேரி, மீளவிட்டான், முத்தையாபுரம் மற்றும் அத்திமரப்பட்டி ஆகிய 5 பஞ்சாயத்துகள் சேர்க்கப்பட்டது. அப்போது இம்மாநகராட்சியில் 51 வார்டுகள் மற்றும் பஞ்சாயத்துகள் பகுதிகள் சேர்த்து 60 வார்டுகள் உள்ளடங்கியதாகும். மாநகராட்சிக்கான அடிப்படை பணிகளுக்கு தேவையான பணியாளர்கள் அரசிடமிருந்து அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையில் மாநகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள போதிய நிரந்தர துப்புரவு பணியாளர்கள் இல்லாத நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 24100./பி3/2017 நாள் 31.10.2017ன் படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் ஏற்படும் காலி இடங்களை தனியார் மூலமாக மாமன்ற அனுமதியுடன் Tender Act Rules 2000ன்படி ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி ஏதும் பெற தேவை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாநகராட்சியில் அனுமதிக்கப்பட்ட பணியிடம் மற்றும் இதர பணிகளுக்கு தேவையான பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தினக்கூலியின் அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். | 41)அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது<br>அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப் பட்டது. |

| வ.எண் | பணியிட விபரம் | பணியாளர் எண்ணிக்கை | ஒருநாள் ஊதியம் ரூ. | வருட ஊதியம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர்கள் | 630 | 354 | 80287200/– |
| 2 | கம்போஸ்ட் சூப்பர்வைசர் | 1 | 400 | 144000/– |
| 3 | டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் | 400 | 320 | 46080000/– |
| 4 | மேற்பார்வையாளர்கள் | 70 | 400 | 10080000/– |
| 5 | TATA ACE வாகன ஓட்டுநர்கள் | 162 | 426 | 24844320/– |
| 6 | தூய்மை காவலர்கள் | 20 | 481 | 3463200/– |
| 7 | சுகாதார பிரிவு கணினி இயக்குபவர் | 9 | 481 | 1558440/– |
| 8 | நகர சுகாதார செவிலியர் | 3 | 11000(மாதம்) | 396000/– |
| 9 | வாகன மேற்பார்வையாளர் | 1 | 437 | 157320/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | பள்ளி கழிவறை பராமரிப்பு தூய்மைப் பணியாளர்கள் (கல்வி நிதி) | 37 | 354 | 4715280/– |
| | மொத்தம் | | | 171725760/– |

| | | |
|---|---|---|
| | நிர்வாக நலன் கருதி தொடர்ந்து பொது சுகாதார பணிகள் எவ்வித தடையின்றி நடைபெற ஏதுவாக மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணியாளர்களை 01.04.2021 முதல் 30.09.2021 முடிய உள்ள காலங்களில் பணியமர்த்திக்கொள்ள அனுமதிக்கவும், மேலும் அதற்குரிய செலவினம் ரூ 17.50 கோடிக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1)01.04.2021 முதல் 30.09.2021 வரை நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ. 17.50 கோடிக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2)அவசர அவசியம் கருதி 01.04.2021 முதல் 30.04.2021 வரையிலான காலங்களுக்கு ஆணையரின் முன் அனுமதி பெற்று ஊதியம் வழங்கியதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். எச்1/296/18 | |
| | 6) நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (எம்.இ1) துறை அரசாணை (எம்.எஸ்) எண். 36 நாள் 19.04.2021இல் கோயம்புத்தூரில் செயல்படும் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கான உள்ளாட்சிகளின் மூலம் செலுத்தப்படும் பங்கு தொகையினை 2021.22 ஆம் ஆண்டிற்கு தூத்துக்குடி மாநகராட்சியின் பங்களிப்பினை ரூ 2.00 இலட்சத்திலிருந்து ரூ 3.00 இலட்சமாக திருத்தி அமைத்து 01.04.2021 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது என ஆணையிடப்பட்டுள்ளது. வரப்பெற்ற அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>மேலும் அதன்பேரில் கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு 2021.22ஆம் ஆண்டிற்கான தூத்தக்குடி மாநகராட்சியின் பங்கு தொகை ரூ. 3.00 இலட்சம் செலுத்திடவும். அதற்கான செலவினத்தினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் பதிவு செய்யலாம்<br>2) மாமன்றம் அனுமதிக்கலாம். சி1/ 1718/2021 | 43) அலுவலகக் குறிப்பு–1 பதிவு செய்யப்பட்டது அலுவலகக் குறிப்பு–2 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 7) தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்தி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையில் Sidha Foods Tech. 83/3 Sithi Reddy Patti Village and Post, Thirumangalam Taluk. Madurai Dt. 625704 நிறுவனத்தின் மூலம் ரூ 50/– மதிப்புள்ள சித்தா மருந்து பெட்டகங்கள் 5000 எண்ணம் கொள்முதல் செய்வதற்கும் மேலும் கொள்முதல் செய்வதற்காகும் செலவுத் தொகை ரூ 2,50,000/–னை இம்மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>எச்2/1793/2021 | 44) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 8)இம்மாநகராட்சி பொது சுகாதாரம் மலேரியா பிரிவின் மூலம் கொசு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் முதிர் கொசுக்களை ஒழிக்க VEHICLE MOUNTED FOGGING MACHINE மூலம் இம்மாநகராட்சி அனைத்து வார்டுகளிலும் OUTDOOR மற்றும் INDOOR FOGGING வகைக்கு பயன்படுத்தப்படும் பைரித்திரம் (PYRETHRUM 2% E X TRACT) என்ற மருந்தினை TNMSC அனுமதி பெற்ற M/s. Paramount Pesticides Limited நிறுவனத்தின் மூலம் 1 லிட்டர் ரூ. 1100/– (Plus GST @ 18% Rs,. 198 Rs. 1298/-) வீதம் 1000லிட்டர் கொள்முதல் செய்வதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 15,00,000/–னை (ரூபாய் பதினைந்து இலட்சம்) இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம் எச்2/7958/13 | 45) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 9)இம்மாநகராட்சி பொது சுகாதாரம் மலேரியா பிரிவின் மூலம் கொசு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் கழிவு நீரில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் BT (Bacillus Thuringiensis Var. Israelensis 5 % WP Stain) என்கிற மருந்தினை கொள்முதல் செய்வதற்கு TNMSC அனுமதி பெற்ற M/s. Ajay Bio-Tech (India) Ltd, Pune நிறுவனத்தின் மூலம் 1 கிலோ ரூ. 1047/– (Plus GST @ 12% Rs. 198 Rs. 1298/-) வீதம் 1000கிலோ வாங்குவதற்கும் மேற்கண்ட வேதி மருந்துகளை கொள்முதல் செய்வதற்கும் உத்தேச செலவுத் தொகை ரூ. 12,00,000/–னை (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம்) இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்<br>எச்2/01824/21 | 46) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 10) இம்மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் திருமதி. மு. செய்யது தாஜில் ஷிபாயா என்பவர் ஆய்வக நுட்புனராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் ஒரு மாற்றுத்திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.<br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்டம் 169(H) (C) ன் படியும் அரசு ஆணை TAMIL NADU GOVERNMENT GAZETTE ன் படியும் திருமதி மு. செய்யது தாஜில் ஷிபாயா என்பவருக்கு 2020–2021 இரண்டாம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>000535/2021/மே,ம,அ2 | 47) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 11) தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரப் பணி, திடக்கழிவு மேலாண்மை கழிவு நீர் அகற்றும் பணிகளுக்காக பல்வேறு வகையான 165 வாகனங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தினமும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனங்களின் பயன்பாடு தொடர்ச்சியாக இருப்பதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு பொது சுகாதாரப் பணிகளில் தொய்வு ஏற்படும் சூழல் உருவாகிறது. இதனால் பொது சுகாதார பணிகள் இடையூறின்றி நடைபெற ஏதுவாக அவ்வப்போது ஏற்படக்கூடிய பழுதுகள் உடனடியாக சரி செய்யப்பட்டு வாகனங்கள் அந்தந்த பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.<br>இப்பொருள் தொடர்பான GO Ms.No 983 (Transport IV) Depat. dated 03.08.2004 அரசாணையில் அனுமதிக்கப்பட்ட தொகையினை காட்டிலும் கூடுதலாக செலவு ஏற்படுகிறது. மேற்படி செலவினமானது தவிர்க்க முடியாததாகும். எனவே இம்மாநகராட்சி பொது சுகாதார பயன்பாட்டில் உள்ள வாகனங்கள் அனைத்தும் தொய்வின்றி இயங்குவதற்கும் சாலை வரி மற்றும் வாகன காப்பீடு செலுத்துவதற்கும் அவ்வப்போது எதிர்பாராமல் ஏற்படுகின்ற அத்தியாவசிய பழுது நீக்க கூடுதல் பணிகளுக்காகவும் 01.04.2021 முதல் 31.03.2022 நடப்பாண்டிற்குரிய உத்தேச செலவினம் ரூ. 7000000/–ஐ பொது நிதியில் இருந்து செலவு செய்திட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>வா.ப.எச்.5/00121/2020 | 48) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

ஆணையர்(ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 10.06.2021